## கடல்

**வினா விடை**

**1. கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?**

மீன்கள், முத்து, சிப்பி, மழை ஆகியவை கடல் நமக்கு அளிக்கும் வளங்களாகும்.

**2. 'கடல்' பாடலின் பொருளை உம் சொந்த நடையில் எழுதுக.**

- எல்லையில்லா கடல் இரவும் பகலும் ஓய்வில்லாமல் அலை வீசுகிறது.
- அலைகள், குதிரைகள் அணிவகுப்பது போல வருகின்றன.
- அலையின் ஓசை இடியோசை போல இருக்கிறது.
- மலையைக் கூட அடக்கி விடும் கடலிலிருந்து எண்ணற்ற மீன்கள், முத்துகள், சிப்பிகள் போன்றவை கிடைக்கின்றன.
- மழைக்குக் காரணமாகவும், மழையை சேமிக்கும் கலனாகவும் கடல் விளங்குகிறது.

**3. எல்லையறியாப் பெருங்கடல் என்று கூறக் காரணம் என்ன?**

கடல் மிகப் பெரியது. கடலின் ஒரு கரையிலிருந்தால் அதன் மறுகரையை காண இயலாது. எனவே அது எல்லையறியாப் பெருங்கடல் எனப்படுகிறது.

## படம் இங்கே! பழமொழி எங்கே?

**வினா விடை**

**1. பழமொழி என்பது யாது?**

- நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய மொழிகள் பழமொழிகள்.
- பழங்காலத்திலிருந்து வழக்கில் இருப்பவை.

**2. விடுகதை என்றால் என்ன?**

- ஓரிரு வரிகளில் ஒரு பொருளை மறைத்து வைத்து தொடுக்கப் படும் புதிர் விடுகதை எனப்படும்.
- இதனை நொடி என்றும், பிசி என்றும் கூறுவர்

**3. இப்பாடத்தில் நீ அறிந்து கொண்ட பழமொழிகளைப் பட்டியலிடுக.**

- யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே
- இக்கரைக்கு அக்கரை பச்சை
- ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்
- ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
- காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
- அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்